**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மடத்துக்குளம்.**
**முன்னிலை. திரு.M. தீனதயாளன் B.A.,B.L.,LLM.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், மடத்துக்குளம்**

**2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ஆம் நாள் வியாழக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், ஆனித்திங்கள் 32 ஆம் நாள்)**

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 78/2025
CNR.No.TNTi22-000348-2025

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, உதவி ஆய்வாளர், மடத்துக்குளம் காவல் நிலையக் குற்ற எண். 163/2023 |
| //எதிர்// | | |
| எதிரி | – | கார்த்திக் (வயது 26/2023)<br>த/பெ. ராஜ்குமார்,<br>199/1D, ஸ்ரீ சுந்தரா மில்,<br>சோமனூர்,<br>கோயம்புத்தூர். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 338 IPC-ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 338 IPC -ன் கீழ் |
| தீர்மானம் | – | இவ்வழக்கின் எதிரி மீது இந்திய தண்டனை தொகுப்புச் சட்டம் பிரிவுகள் 279, 338 IPC ன் படியான குற்றச்சாட்டின் படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை குவிமுச 255(1)ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| புகார் நாள் | - | 24.08.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | - | 28.08.2023 |
| பிணையில் சென்ற நாள் | - | காவல்நிலைய பிணை – 28.08.2023 |
| கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | - | 21.03.2025 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | - | 27.05.2026 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | - | 14.07.2026 |

| | | |
|---|---|---|
| தீர்ப்புரை நாள் | - | 16.07.2026 |

இவ்வழக்கானது கடந்த 21.03.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு விசாரணை நடைமுறைகளைப் பின்பற்றி, விசாரிக்கப்பட்ட இவ்வழக்கானது 14.07.2026 ஆம் நாளன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர், திரு. S. பகவத்சிங் B.A.,B.L.,Grade–1 அவர்களும், எதிரி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முகம்மது ஷாஜகான் B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும் நேர்நின்று எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், காவலறிக்கையையும், வழக்கின் பல்வேறு படிநிலைகளில் எதிரிகளிடம் நீதிமன்றம் வினவிய போது அவர் அளித்த பதில்களையும், ஓர்வு செய்தும் வழக்கின் சான்றுகளை கூர்ந்தாய்ந்தும். இதுநாள்வரை நிலுவையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது.

## தீ ர் ப் பு ரை

1) இவ்வழக்கின் குற்ற இறுதியறிக்கையின்படி, 23.08.2023 ம் தேதியன்று மாலை 6.00 மணிக்கு மடத்துக்குளம் காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட மடத்துக்குளம் – உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் கருப்புசாமி புதூர் பிரிவு பாலம் அருகே இவ்வழக்கின் எதிரியானவர் அவரது TN 37 DB 5151 JEEP CUMPUS என்ற வாகனத்தில் அவரது அம்மா மீனாள், அக்கா விசாலாட்சி மற்றும் மனைவி விசாலாட்சி ஆகியோருடன் கோயம்புத்தூர் செல்வதற்காக மேற்படி ரோட்டின் வலதுபுறமாக கிழக்கிலிருந்து மேற்காக அதிகவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று மேற்படி ரோட்டில் பாலம் கட்டிகொண்டு இருப்பது கவனிக்காமல் பாலத்தின் மீது மோதி சாலை விபத்தை ஏற்படுத்தியுள்ளார். அதனால் மேற்படி காரில் பயணம் செய்த சாட்சி மீனாளுக்கு இடது பக்க இடுப்பு மற்றும் இடது முழங்காலில் கொடுங்காயமும், சாட்சி 2 ஆன விசாலாட்சிக்கு தாடையில் கொடுங்காயமும் ஏற்பட காரணமாக இருந்துள்ளார் என்று எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 338 இதச வின் கீழ் மடத்துக்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி குற்ற அறிக்கையைப்பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 338 IPC–ன் படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டது.

3) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், குவிமுச பிரிவு 207 வது பிரிவின் படி உள்ளதுமான ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4) ஆவணங்களைப் பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது கேள்விகள் வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 338 IPC ன் படி குற்றம் பற்றி விளக்கி வினவிய போது எதிரி குற்றத்தினை மறுத்து, பொய் வழக்கு என்றும், பொய் சாட்சியம் என்றும், மறுத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3. வரையானவர்கள் வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையான சான்று ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில். சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>

இவ்வழக்கின் புகார்வாதியும், அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டவருமான மீனாள் என்பவர் ஸ்ரீ சுந்தரா மில், செந்தில்நகர், சோமனூரில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அவரது கணவர் சோமனூரில் ஸ்ரீ சுந்தரா மில் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். அவருக்கு உதவியாக அ.சா.1 னின் மகன் கார்த்திக் வேலை செய்து வருகிறார். 23.08.2023 ம் தேதியன்று மாலை 6.00 மணிக்கு மடத்துக்குளம் உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் கருப்புசாமி புதுார் பிரிவு பாலம் அருகே அ.சா.1 ம், அவரது மகன் கார்த்திக் என்பவரும், மகள் விசாலாட்சி மற்றும்

மருமகள் விசாலாட்சி ஆகியோருடன் கோயம்புத்தூர் செல்வதற்காக TN 37 DB 5151 JEEP CUMPUS என்ற வாகனத்தில் சென்றபோது அ.சா.1 னின் மகன் மேற்படி ரோட்டின் வலதுபுறமாக கிழக்கிலிருந்து மேற்காக அதிகவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று மேற்படி ரோட்டில் பாலம் கட்டிகொண்டு இருப்பது கவனிக்காமல் பாலத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால், காரில் பயணம் செய்த அ.சா.1.க்கு இடது பக்க இடுப்பு மற்றும் இடது முழங்காலில் மொக்கைகாயமும், அ.சா.1 னின் மகளான விசாலாட்சிக்கு தாடையில் காயமும் ஏற்பட்டுள்ளது. அ.சா.1 னின் மருமகளான விசாலாட்சிக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. விபத்து ஏற்பட்டவுடன் அங்கிருந்தவர்கள் உதவியுடன் உடுமலை கோகுல் பாலிகிளினிக்கில் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு அ.சா.1 னின் விருப்பத்தின் பேரில் கோவை கங்கா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். விபத்து சம்மந்தமாக மடத்துக்குளம் போலீசார் விசாரணை செய்த போது விபத்தை ஏற்படுத்தியவர் மீது அ.சா.1. ஆல் வாக்குமூல புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

அ.சா.1. கொடுத்த வாக்குமூல புகாரை பெற்ற இவ்வழக்கின் தலைமைக்காவலர் மணிகண்டன் என்பவரால் மடத்துக்குளம் காவல்நிலைய குற்ற எண். 163/2023 என்ற எண்ணில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, புலன்விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் மோகன் என்பவர் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் பெரியசாமி, செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் விசாரித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை, காயச்சான்றிதழ் பெற்று, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து, இவ்வழக்கின் புகார்வாதியான அ.சா.1. கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, மற்றும் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான 3 முதல் 10 வரையானவர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, இந்நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 279, 338 இதச பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7) எதிரியிடம் கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி எதிரிக்கு பாதகமாக

தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்து, பொய் வழக்கு என்றும், பொய் சாட்சியம் என்றும், பதிலளித்துள்ளார். மேலும் எதிரி தரப்பில் விசாரிக்கச் சாட்சிகள் இல்லை என்றும், கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

8) **அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம்**

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றுகள் மற்றும் ஆவணச்சான்றுகள் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டுமென்று வாதிட்டார்.

9) **எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம்**

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்குரைஞர் தமது வாதுரையில், அசா.1 எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றும், அ.சா.1. எதிரி மீது பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரை விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல், இந்த வழக்கில் எதிரி மீது பொய்யாக குற்றச்சாட்டு கூறி வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1. தனது முதல் விசாரணையில், விபத்து குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2. என்ன நடந்தது, விபத்து எப்படி நடந்தது என்று தெரியாது சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாகவும், எதிரி மீது எவ்வித குற்றமும் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், எதிரியை இக்குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

10) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சான்றாவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

11) **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால்**

இவ்வழக்கின் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 338, ன் படி, வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்க்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

12) **தீர் வு :–**

**அரசு தரப்பு வழக்கு என்னவென்றால்**

(12.01) 23.08.2023 ம் தேதியன்று மாலை 6.00 மணிக்கு மடத்துக்குளம் – உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் கருப்புசாமி புதுார் பிரிவு பாலம் அருகே இவ்வழக்கின் எதிரியானவர் TN 37 DB 5151 JEEP CUMPUS என்ற வாகனத்தில் அவரது அம்மாவான அ.சா.1. மீனாள், அக்கா விசாலாட்சி மற்றும் மனைவி விசாலாட்சி ஆகியோருடன் கோயம்புத்துார் செல்வதற்காக மேற்படி ரோட்டின் வலதுபுறமாக கிழக்கிலிருந்து மேற்காக அதிகவேமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று மேற்படி ரோட்டில் பாலம் கட்டிகொண்டு இருப்பது கவனிக்காமல் பாலத்தின் மீது மோதி சாலை விபத்தை ஏற்படுத்தியுள்ளார். அதனால் மேற்படி காரில் பயணம் செய்த அ.சா.1. மீனாளுக்கு இடது பக்க இடுப்பு மற்றும் இடது முழங்காலில் கொடுங்காயமும், சாட்சி 2 ஆன விசாலாட்சிக்கு தாடையில் கொடுங்காயமும் ஏற்பட காரணமாக இருந்துள்ளார் என்று எதிரி மீது 279, 338 இதச வின் கீழ் மடத்துக்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில், சந்தேகத்திற்க்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்து பார்க்கும் போது,

(12.02) இவ்வழக்கின் புகார்வாதியான அ.சா.1. மீனாள் என்பவரது சாட்சியத்தின் படி, இவ்வழக்கின் எதிரி அ.சா.1 னின் மகன். 2023 ம் ஆண்டு ஆவணி மாதம் காரைக்குடியில் திருமணத்திற்கு சென்றுவிட்டு திரும்பி அ.சா.1 னின் மகன்

காரை ஓட்ட அ.சா.1ம், அவரது மகள் விசாலாட்சி மற்றும் மருமகள் விசாலாட்சி ஆகியோர் உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது சாலை வேலைகள் நடந்து கொண்டிருந்ததால் பாலத்தின் மீது வாகனம் மோதி காயம் ஏற்பட்டது. விபத்து எப்படி நடந்தது என்று ஞாபகம் இல்லை அ.சா.1. சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1. கொடுத்த புகார் வாக்குமூலம் இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(12.03) அ.சா.1னின் சாட்சியத்தின் படி, கடந்த 21.08.2023ம் தேதி காரைக்குடியில் திருமணத்திற்கு சென்றுவிட்டு திரும்பி அ.சா.1னின் மகன் காரை ஓட்ட அ.சா.1ம் அவரது மகள் விசாலாட்சி மற்றும் மருமகள் விசாலாட்சி ஆகியோர் உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது சாலை வேலைகள் நடந்து பாலம் கட்டிக்கொண்டிருப்பது தெரியாமல் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் சென்று பாலத்தின் மீது மோதியதால் அ.சா.1க்கும், மகள் மற்றும் மருமகளுக்கு காயம் ஏற்பட்டதாக புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு எதிரி அ.ச.1னின் மகன் என்பதால் புகார் வாக்குமூலத்திலும், போலீஸ் விசாரணையிலும் கூறிய வழக்கு சங்கதிகளுக்கு மாறாக அதுபற்றி குறிப்பிட்டு கூறி சாட்சியம் எதுவும் அளிக்காமல், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(12.04) இவ்வழக்கில் காயம்பட்டவரும், சம்பவ இட கண்ணுற்ற சாட்சியுமாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.1னின் மகளான அ.சா.2. விசாலாட்சி என்பவரது சாட்சியத்தின் படி, 2023ம் ஆண்டு ஆவணி மாதம் காரைக்குடியில் திருமணத்திற்கு சென்றுவிட்டு திரும்பி அ.சா.2னின் அண்ணன் காரை ஓட்ட அ.சா.2ம், அவரது அம்மா மற்றும் அண்ணி விசாலாட்சி ஆகியோர் வந்து கொண்டிருந்த போது அ.சா.2. தூங்கிக்கொண்டிருந்ததகவும், என்ன நடந்தது என்று தெரியாது. விபத்து எப்படி நடந்தது என்று தெரியாது சாட்சியம் அளித்துள்ளார்.

(12.05) அ.சா.2னின் சாட்சியத்தின் படி, கடந்த 21.08.2023ம் தேதி அ.சா.1னின் அண்ணன் காரை ஓட்ட அ.சா.2 அவரது அம்மா மற்றும் அண்ணி

ஆகியோர் உடுமலை புதிய பைபாஸ் ரோட்டில் வந்து கொண்டிருந்த போது பாலம் கட்டிக்கொண்டிருப்பது தெரியாமல் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் சென்று பாலத்தின் மீது மோதியதில் அ.சா.2 க்கும், அவரது அம்மா, அண்ணன் மற்றும் அண்ணிக்கு காயம் ஏற்பட்டதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, மேற்படி போலீஸ் விசாரணையில் கூறிய வழக்கு சங்கதிகளுக்கு மாறாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

(12.06) இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான அ.சா.3. சிறப்பு உதவி ஆய்வாளர் முத்துராமலிங்கம் தன்னுடைய சாட்சியத்தில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தததது பற்றியும், சம்பவ இடத்தை பார்வையிட்டது பற்றியும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றது பற்றியும், விபத்து பதிவேடு, காயச்சான்றிதழ் பெற்றது பற்றியும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தது பற்றியும், சாட்சிகளை விசாரணை செய்தது பற்றியும், சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றியும், சாட்சியம் அளித்துள்ளார்.

(12.07) மேற்படி சாட்சியங்களை பரிசீலணை செய்த போது, இவ்வழக்கின் எதிரியானவர் காரில் அவரது அம்மா, அவரது தங்கை மற்றும் அவரது மனைவியை உட்கார வைத்துக்கொண்டு ஓட்டி வந்து, பாலம் கட்டிக்கொண்டிருப்பது தெரியாமல் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் சென்று பாலத்தின் மீது மோதியதில் அ.சா.1. மற்றும் அ.சா.2 க்கு காயம் ஏற்பட்டதாக காரணமாக இருந்துள்ளார் என்ற இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து குறிப்பிட்டு கூறி இவ்வழக்கின் புகார்வாதியான அ.சா.1 தனது முதல் விசாரணையில், சாட்சியம் எதுவும் அளிக்காமல் சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதும், இவ்வழக்கின் , கண்ணுற்ற சாட்சியான அ.சா.2. சம்பவத்தை தான் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதும், அ.சா.3, இவ்வழக்கின் புலன்விசாரணை செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளதும் தெரியவருகிறது.

(12.08) மேலும் மனுவாதிகள்/எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 320(2)ன் படி, C.M.P.No. 646/2026 என்ற எண்ணில் 02.07.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவில், புகார்வாதியால், எதிரிகள் மீது 279, 338 IPC, –ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் நிகழ்வு நிலை புகார்தாரரும், எதிரியும், பெரியோர்கள் மூலம் பைசல் பேசி சமாதானம் ஆகிவிட்டதாகவும், எனவே மேற்படி வழக்கினை உபயவாதிகள் நடத்த விரும்பவில்லை என்றும், மனு தாக்கல் செய்யப்பட்டு, நிகழ்வுநிலை புகார்வாதியான அ.சா.1. மீனாள் அ.சா.2. விசாலாட்சி ஆகியோரும் இவ்வழக்கின் எதிரியான கார்த்திக் என்பவரும் கையொப்பம் இட்டுள்ளார்கள்

(12.09) இதச பிரிவுகள் 279, 338 IPC, ன் படியான குற்றமானது சமரசம் செய்து கொள்ளக்கூடிய குற்றம் இல்லை என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி சமரச மனு தாக்கல் செய்துள்ளதை பார்க்கும் போது இருதரப்பினருக்கும் பிரச்சனை ஏற்பட்டு, அதனால் புகார் கொடுக்கப்பட்டு, பின்னிட்டு சமரசம் செய்து கொள்ளப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் அ.சா.1 குறிப்பிட்டுள்ளபடி, இவ்வழக்கின் எதிரி தான் அ.சா.1.ஐ, தகாத வார்த்தையால் பேசி, தாக்கி காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற இவ்வழக்கு சங்கதிகள் அரசு தரப்பு சாட்சிகளின் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

(12.10) மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை பார்க்கும் போது, அ.சா.1.ஆல் புகார் வாக்குமூலம் கொடுக்கப்பட்டு, இவ்வழக்கின் எதிரியானவர் அ.சா.1 னின் மகன் அ.சா.2 னின் அண்ணன் என்பதால் பின்னிட்டு சமரசம் செய்து கொள்ளப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் அ.சா.1 குறிப்பிட்டுள்ளபடி, எதிரி தான் அவரது வாகனத்தை ஓட்டி வந்து, சாலை வாகன விபத்தை ஏற்படுத்தி, அ.சா.1 மற்றும் அ.சா.2.க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்ற இவ்வழக்கு சங்கதிகள் அரசு தரப்பு சாட்சிகளின் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை

என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

## இறுதி முடிவு

எதிரி மீது இந்திய தண்டனை தொகுப்பு சட்டம் பிரிவு 279–ன் கீழ் எதிரி அவரது வாகனத்தை அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சாலை வாகன விபத்தினை ஏற்படுத்தினார் என்ற குற்றத்திற்கான குற்றச்சாட்டின் மீது தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை இந்த குற்றச்சாட்டில் இருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் ஆணையிடுகிறது.

எதிரி மீது இந்திய தண்டனை தொகுப்பு சட்டம் பிரிவு 338–ன் கீழ் எதிரி ஏற்படுத்திய சாலை விபத்தின் காரணமாக ஈஸ்வரி என்பவருக்கு தலையில் கொடுங்காயம் ஏற்பட காரணமாக இருந்துள்ளார் என்ற குற்றத்திற்கான குற்றச்சாட்டின் மீது தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை இந்த குற்றச்சாட்டில் இருந்து குவிமுச பிரிவு 248(1) ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் ஆணையிடுகிறது.

முடிவாக, இவ்வழக்கின் எதிரியான கார்த்திக் என்பவர் மீது இந்திய தண்டனை தொகுப்புச் சட்டம் பிரிவுகள் 279, 338 IPC ன் படியான குற்றச்சாட்டின் படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை குவிமுச 255(1)ன் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் சான்று பொருள்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதனால் சான்றுபொருள்கள் பொருத்தான உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு. அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு. என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு. இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் நாள் என்னால் இத்திறந்த

நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.16 17:44:46 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர்,**
**மடத்துக்குளம்.**

**இணைப்பு :–**

**அரசுத் தரப்பு சாட்சிகள் :–**

| **அரசு தரப்பு சாட்சிகள்** | **நாள்** | **சாட்சிகளின் பெயர்கள்** | **சாட்சிகள் விபரம்** |
|---|---|---|---|
| அ.சா.1. | 02.07.2026 | மீனாள் | புகார்வாதி |
| அ.சா.2. | 02.07.2026 | விசாலாட்சி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | 09.07.2026 | முத்துராமலிங்கம் | சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :–**

| **ஆவணங்களின் எண்** | **சான்றாவணங்கள் விபரம்** | **சான்றளிக்கப்பட்ட சாட்சிகள்** |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1.னின் கையொப்பம் | அ.சா.1. |
| அ.சா.ஆ.2. | 24.08.20213 ஆம் தேதியிட்ட இண்டிமேசன் | அ.சா.3. |
| அ.சா.ஆ.3. | புகார் வாக்குமூலம் | அ.சா.3. |
| அ.சா.ஆ.4. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3. |
| அ.சா.ஆ.5. | பார்வை மகஜர் | அ.சா.3. |
| அ.சா.ஆ.6. | மாதிரி வரைபடம் | அ.சா.3. |
| அ.சா.ஆ.7. | TN 37 DB 5151 JEEP CUMPUS – மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.3. |
| அ.சா.ஆ.8. | மீனாள் என்பவரின் – விபத்து பதிவேடு | அ.சா.3. |
| அ.சா.ஆ.9. | மீனாள் என்பவரின் – காயச்சான்றிழ் | அ.சா.3. |
| அ.சா.ஆ.10. | விசாலாட்சி என்பவரின் காயச்சான்று | அ.சா.3. |
| அ.சா.ஆ.11. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.3. |

**<u>எதிரி  தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :– இல்லை</u>**

**<u>அரசு தரப்பு சான்று பொருள்கள்:–</u>** இல்லை.

**<u>குறிப்பு</u>**

1. எதிரி  விசாரணைக்காலத்தில் பிணையிலிருந்துள்ளார்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.16 17:45:08 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர்,**
**மடத்துக்குளம்.**

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருப்பூர், அவர்களுக்கு,

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE MADATHUKULAM**

**CASE SUMMARY**

**S.T.C.No. 78/2025**

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட R.O.C.No.814/2020/RG/F1(P.Dis.No.36/2021) படியும், விதி 106 Criminal Rules of Practice 2019 – ன் படியும், வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | **CASE SUMMARY** | | | |
|---|---|---|---|---|
| (i) | **The Period of remand of the accused** | **Name of the accused** | **Date of Remand** | **Release on** |
| | 28.08.2023<br>-<br>station Bail<br>28.08.2023 | Karthick | 28.08.2023 | 28.08.2023<br>-<br>Station Bail |
| (ii) | **Date of filing of the Complaint/ final report in the Court** | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | Complaint statement on 28.08.2023 | District Munsif Court Cum Judicial Magistrate Court, Madathukulam - Final Report 29.11.2023 | |
| (iii) | **Date of committal of the case to the Court of Sessions** | Not applicable | | |
| (iv) | **Date of questioning of the accused under section 380, 34 of IPC** | 27.05.2026 | | |

| (v) | **Filling of all miscellaneous petitions and their results** | **:** | **Crl.M.P.No.** | **Date of Filing** | **Result** |
|---|---|---|---|---|---|
| | | | 320 Cr.P.C Petition<br>C.M.P.No. 646/2026 | 02.07.2026 | Petition is dismissed |

| (vi) | Date of Examination in chief and cross | : | Name of the Examination | Date of Chief | Date of cross |
|---|---|---|---|---|---|
| | | : | P.W.1 - Meenal | 02.07.2026 | 02.07.2026 |
| | | : | P.W.2 - Visalatchi | 02.07.2026 | 02.07.2026 |
| | | : | P.W.3 - Muthuramalingam | 09.07.2026 | 09.07.2026 |

| | | |
|---|---|---|
| (vii) | **Date of Examination of the accused under section 313 of the Code** | 14.07.2026 |
| (viii) | **Details of abscondance of an accused and his appearance/production, as the case may be** | - Nil - |
| (ix) | **Grant of stay by superior Courts and the results thereof** | - Nil - |

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.16 17:45:18 +0530

**District Munsif Cum Judicial Magistrate,**
**Madathukulam.**